[Sri D. S. Authimoolam] [26th August 1961

சிறு நிலச் சுவான்தார்கள் விஷயத்தில் தாராளமான மனப்பான்மையில் இருந்து, பத்து எக்கர் வரையில் அவர்கள் சாகுபடி செய்துகொள்ளலாம் என்ற உரிமையை அவர்களுக்கு வழங்கவேண்டும். மற்றபடி உத்தியோகஸ்தர்கள் வெளியூர்களிலிருந்து ரிடையராகி ஊருக்கு வந்தால், அவர்கள் 3 எக்கருக்கு மேல் பயிர்செய்ய முடியாது என்று சட்டத்தில் இருப்பது பெரிய கோளாறாக இருக்கிறது. விவசாய டெபுடி டைரக்டர் ஒருவர் வேலையிலிருந்து ஓய்வு பெற்று கிராமத்திற்குத் திரும்பி பென்ஷன் வாங்கிக் கொண்டு இருக்கிறார் என்று வைத்துக்கொள்வோம். அவர் ஊரிலேயே அவர் 3 எக்கர் வைத்துக்கொண்டு பார்த்துக்கொண்டு இருக்கவேண்டுமா என்று கேட்கிறேன். அவர் பெற்ற விவசாய அனுபவத்தை வைத்துக் கொண்டு பத்து எக்கர் வரையில் சாகுபடி செய்யக்கூடாதா என்று கேட்கிறேன். அவர் நிறைய சாகுபடி செய்வது இந்தத் தேசப் பொருளாதாரத்தை விருத்தி செய்யாதா ? இப்படிப்பட்ட வகையில் சொந்த சாகுபடி செய்வதற்குப் பத்து எக்கர் வரையில் தாராளமாக அனுமதிக்கவேண்டும்.

நஷ்ட ஈடு தரும்போது, அதை உடனடியாகவும் ரொக்கமாகவும் செலுத்திவிடவேண்டும். மார்க்கெட் வால்யூ கொடுக்கவேண்டும். இந்த நாட்டிலுள்ள ஏழை எளிய மக்களுக்கு சர்க்காரிலுள்ள நிலத்தையும் சேர்த்து நல்ல முறையில் பட்டுவாடா செய்யவேண்டும். சர்க்கார் நிலம் எவ்வளவு இருக்கிறது என்பதற்குப் புள்ளி விவரம் தயார் செய்யவேண்டும். இந்த மசோதாவில் இன்னும் நிறைய ஓட்டைகள் இருக்கின்றன. இவ்வளவு பேசினது போதுமென்று நினைக்கிறேன். நல்ல மாட்டுக்கு ஒரு சூடு தானே. இந்த முறையில் நான் சொன்னதைக் கவனத்தில் கொண்டு எல்லோரும் நியாயத்தோடு நடந்துகொள்ள வேண்டும். வோட்டு ஒன்றையே குறிக்கோளாக வைக்கக்கூடாது. மகாத்மா காந்தி சத்தியத்தினால் சுயராஜ்யம் வாங்கினார். ஜில்லாவுக்கு மூன்று பேர் ஆகஸ்டு தியாகி இருந்ததை வைத்து சுயராஜ்யம் வரவில்லை. தயவு செய்து இதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். தருமம்தான் தலைகாக்கும் என்று சொல்லி வணக்கத்துடன் என் உரையை நிறுத்திக்கொள்கிறேன்.

DEPUTY SPEAKER : There are five more minutes. Shall we adjourn now?

HON. MEMBERS : Yes, Sir.

DEPUTY SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. on Monday, the 28th August 1961.

The House then adjourned.

V.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

1–25 p.m.

A. Statutory Rules and Orders.

339. *Notification issued with G.O. Ms. No.* 2464, *Home, dated 20th July* 1961 *exempting from payment of motor vehicles tax leviable in respect of the car MSW* 3156 *belonging to the Trade Commissioner of Trade Representation of Czechoslovak Socialist Republic, Madras Branch.* [*Laid on the table of the House under section* 11 (2) *of the Madras Vehicles Taxation Act* 1931 (*Madras Act III of* 1931).]

B. Reports, Notifications and other papers.

184. *Review of the working of the Excise and Prohibition Department for the first half year* 1960 *commencing from* 1st *April to* 30*th September* 1960.